சரேல்' என்று அவ்விடத்தை விட்டு நீங்கினான்.

அப்போது ஒருவன் "அடே நாராயணா, போகாதே-போகாதே," என்றான்.

மற்றொருவன், "பதில் சொல்ல முடியாமல் ஓடுகின்றான் நாராயணன்," என்றான்.

உடனே மாணிக்கம், "அடே, அவன் போனால் போகிறான். அது ஒரு பயித்தியம். வாருங்கள் நாம் இன்னும் சில பழங்களைப் பறிக்கலாம். ஒரு முறைக்குப் பத்துமுறை எறிந்தால் ஏன் விழாது?" என்றான்.

அவ்விதமே அவர்கள் நெடுநேரம் கல்லெறிந்து சில பழங்களையும், செங்காய்களையும் வீழ்த்தினார்கள் பிறகு அவர்கள் அவைகளைப் பங்குபோட்டு மகிழ்வோடு தின்று வீடுபோய்ச் சேர்ந்தார்கள்.

நாராயணன் : (தலை குனிந்து கொண்டு) ஆம்.

ஆசிரியர் : என்ன ஆச்சரியம் இது! நான் உன்னை மிகவும் நல்லவன் என்று அல்லவோ நினைத்திருந்தேன்! இருக்கட்டும் — நீ ஏன் அவ்விதம் செய்தாய்?

நாராயணன் : நான் கல்லெறிந்தால் தவறாது பழத்தின்மேல் படுமா என்று முயன்று பார்த்தேன்.

ஆசிரியர் : நன்று - நன்று இது நல்ல முயற்சி. ஆசிரியர் உத்தரவில்லாமல் அவ்வாறு செய்யலாமா?

நாராயணன் : நான் செய்தது தப்பிதந்தான்; ஐயா, சிறிதும் எண்ணிப் பாராமல் நான் இந்தச் செயலைச் செய்து விட்டேன்.

ஆசிரியர் அப்போது சிறிது நேரம் ஏதோ எண்ணத்தில் ஆழ்ந்து இருந்தார். நாராயணன் மிகவும் நல்லவன் என்பது அவருக்குத் தெரியும். மிகவும் நல்ல பிள்ளைகள் கூடச் சில சமயங்களில் பிழை செய்து விடுகின்றார்கள் அல்லவா! நாராயணனும் அவ்விதம்

தன், கந்தன், முருகன் முதலியவர்களும் விளையாடுவதற்கு மாமரத்தின் கீழே சென்றோம். அப்போது, இந்த நாராயணன் எங்களுக்கு முன்பே அங்கே வந்து மரத்தின்மேல் கல்லெறிந்து கொண்டு இருந்தான். இவன் எங்களைப் பார்த்து, 'நீங்கள் ஆசிரியரிடம் சொல்லாதீர்கள்; உங்களுக்கு மாம்பழம் தருகின்றேன்,' என்று சொல்லித் தன் மடியிலிருந்து மாம்பழங்களை எடுத்து ஆளுக்கு ஒன்று கொடுத்தான். அவ்வளவே; வேறு ஒன்றும் எனக்குத் தெரியாது. வேண்டுமானால் கோவிந்தன், கந்தன் இவர்களைக் கேட்டுப் பாருங்கள்," என்றான்.

உடனே அவர்களும் மாணிக்கம் சொல்லுவது தான் உண்மையென்றும், நாராயணன் பொய் பேசுகின்றான் என்றும் கூறினார்கள்.

அப்போது நாராயணன், தான் சொல்வதே உண்மையென்றும் அவர்கள் அனைவரும் கூறுவது முற்றிலும் பொய் என்றும் இயம்பினான்.

மாணிக்கம் : சொல்லுவானா! சொன்னால் அவன் உயிரோடு பிறகு வீடு திரும்புவானா?

முருகன் : அடே, இது வீண்பேச்சு. நாம் அடித்தால் அவன் சும்மா இருந்து விடுவானா! அவனுக்கு இருக்கின்ற வலிவு இங்கே யாருக்கும் இல்லையே! ஆனால், அவன் தன் வலிவைக் காட்டிக் கொள்வதில்லை. அவன் தன் வீட்டில் எவ்வளவு வேலைகள் செய்கின்றான் தெரியுமா! அன்று ஒரு நாள், நான் அவன் வீட்டுக்குப் போனேன். அப்போது அவன் தண்ணீர் நிரம்பியிருந்த ஒரு பெரிய தவலையை மிக இலேசாகத் தூக்கித் தோளில் வைத்துக்கொண்டு சென்றானே!



மாணிக்கம் : அடே முருகா, போதும் நிறுத்து. நீ பயங்கொள்ளி. அவன் வலிவு என்னிடம் என்ன செய்யும்? அடே உங்களால் அந்தத் திருட்டு ராமா

# 5

மறுநாள் பழக்கம்போல் யாவரும் பாட சாலைக்குச் சென்றார்கள். நாராயணன் என்றும் போலவே எல்லாச் சிறுவர் களிடமும் அன்பாக இருந்து வந்தான். இன்னும் சொல்ல வேண்டுமானால் அவன் அந்த நிகழ்ச்சியை மறந்து விட்டான் என்றுகூடச் சொல்லலாம். மாணிக்கத்துக்கோ நாராயணன் மீது வஞ்சம் குடிகொண்டு இருந்தது. ஆனால், அவன் அதை வெளிக்குக் காட்டிக்கொள் ளவே இல்லை. அவனுக்கு மற்ற நண்பர் களாகிய கோவிந்தன், கந்தன் முதலிய வர்கள் மீதும் சிறிது கோபம் இருந்தது. அதையும் அவன் காட்டிக் கொள்ள வில்லை. ஆசிரியரோ மாணிக்கத்தின் மீதும் மற்றச் சிறுவர்களின் மீதும் கண்ணாகவே இருந்தார். அன்று மாணிக்கம் சொல்லியது உண்மையாக இருந்தாலும், பொய்யாக இருந்தாலும்